# வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



வேலூர், ஜன. 30 -

வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி தலைமையில் இன்று (30.01.2025-வியாழக்கிழமை) மாலை 05.00 மணியளவில் வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

எனவே வேலூர் மாவட்ட தி.மு.க.விற்கு ட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்:**

கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

## கடலூர் அரசு பெரியார் கலைக் கல்லூரியில்

# மாணவர்களுக்காக மூன்று லட்சம் ரூபாய் வைப்பு நிதி வைக்கப்படும்!

## சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் பேச்சு!

கடலூர், ஜன. 30

கடலூர் அரசு பெரியார் கலைக் கல்லூரியில் தமிழ் ஆய்வுத் துறை சார்பில் கோ.ஐயப்பன் அறக்கட்டளை சார்பில் மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடைபெற்றது.

இதில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு மற்றும் ரூ.3 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு கடலூர் அரசு பெரியார் கலைக் கல்லூரி முதல்வர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார்.

விழாவில் கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பேசியதாவது:

இந்த அறக்கட்டளையின் வைப்பு நிதியாக 2 லட்சம் ரூபாய் இருந்து வருகின்றது.

இந்த நிலையில் அடுத்த ஆண்டு முதல் ஒரு லட்சம் உயர்த்தி வைப்புத் தொகையாக 3 லட்சமாக உயர்த்தப்படும்.

ஆகையால் இதனை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பேசினார்.

இணை பேராசிரியர் பன்னீர்செல்வம் வரவேற்றார். தமிழ் துறைத் தலைவர் கீதா முன்னிலை வகித்தார்.

இதில் அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், மாநகராட்சி கவுன்சிலர் மகேஸ்வரி விஜயகுமார், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர், பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இணை பேராசிரியர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

# பள்ளிக்கல்வித் துறையில் 47,000 தற்காலிகப் பணியிடங்கள் நிரந்தரம்!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, ஜன. 30 -

பள்ளிக் கல்வித்துறையில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தொடர் நீட்டிப்பு பெற்று வந்த தற்காலிக பணியிடங்களான ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பணியல்லாத 47 ஆயிரம் பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாக அறிவித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மதுமதி வெளியிட்டுள்ள அரசாணை வருமாறு:

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டு வரும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத தற்காலிக பணியிடங்களை தொடர்ந்து நீட்டிப்பதன் அவசியம் குறித்து ஆய்வு செய்ய குழு அமைத்து கடந்த 2022ம் ஆண்டு அரசாணை 271 வெளியிடப்பட்டது. அதேபோல 10 ஆண்டுகளுக்கும் மேலாக தற்காலிகமாக உள்ள பணியிடங்கள் தொடர்வதன் அவசியம் குறித்தும் ஆராய பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவின் கூட்டம் கடந்த பிப்ரவரி மாதம் நடந்தது.

அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்படி 52 ஆயிரத்து 578 பணியிடங்களில் பல்வேறு வகையான ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத 47,013 பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக மாற்றலாம் என்றும், தொழிற்கல்வி ஆசிரியர் மற்றும் பல்வேறு ஆசிரியர் அல்லாத 5,418 தற்காலிக பணியிடங்களை ஒழிவடையும் பணியிடங்களாக தற்காலிகமாக தொடரலாம் என்றும், இந்த பணியிடங்களில் இருப்பவர்கள் ஓய்வு பெறும் போது இந்த பணியிடங்கள் சரண் செய்யப்பட வேண்டும் என்றும், ஆசிரியர் அல்லாத 145 பணியிடங்கள் தற்காலிக பணியிடங்களாக தொடர்வதுடன் அவர்களுக்கு மேலும் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கலாம் என்றும், முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் (ஆண் மற்றும் பெண்) பணியிடங்களை புத்தாக்கம் செய்யலாம் என்றும், முடிவு எடுக்கப்பட்டு பள்ளிக்கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் தற்காலிக பணியிடங்களுக்கு ஒருங்கிணைந்த அரசாணை வழங்க வேண்டி பள்ளிக்கல்வி இயக்குநர் அரசுக்கு கோரிக்கை வைத்தார்.

மேற்கண்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலித்த அரசு அதையேற்று 47,013 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத தற்காலிக பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாகவும், 5,418 பணியிடங்களில் உள்ளவர்கள் ஓய்வுக்குப் பிறகு நாளடைவில் ஒழிவடையும் பணியிடங்களாக அறிவித்து, அவர்கள் ஓய்வு பெறும் வரை தற்காலிக பணியிடங்களாக தொடரலாம் என்றும், அவர்கள் ஓய்வு பெறும் போது சரண் செய்ய அனுமதி வழங்கலாம் என்றும், 145 பணியிடங்களுக்கு இறுதியாக தொடராணை வழங்கப்பட்டு அந்த ஆணை முடிவடையும் நாளுக்கு அடுத்த நாள்முதல்31.12.2028வரை தொடர் நீட்டிப்பு வழங்கலாம் என்று முடிவு செய்து அரசு ஆணையிடுகிறது. அத்துடன் முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் (ஆண், பெண்) மற்றும் முதன்மைக் உடற்கல்வி ஆய்வாளர்(பெண்) ஆகிய இரு பணியிடங்களுக்கு புத்தாக்கம் செய்து 18.10.2004ல் எண் 155 அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




கடலூர் அரசு பெரியார் கலைக் கல்லூரியில் தமிழ் ஆய்வுத் துறை மற்றும் கோ.ஐயப்பன் அறக்கட்டளை சார்பில் மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு மற்றும் ரூ.3 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு கடலூர் அரசு பெரியார் கலைக் கல்லூரி முதல்வர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். விழாவில் கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். இணை பேராசிரியர் பன்னீர்செல்வம் வரவேற்றார். தமிழ் துறைத் தலைவர் கீதா முன்னிலை வகித்தார். இதில் அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், மாநகராட்சி கவுன்சிலர் மகேஸ்வரி விஜயகுமார், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர் மற்றும் பேராசிரியர்கள், மாணவ – மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இணை பேராசிரியர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**குடந்தை பத்மநாபன்**
**சனவரி 30 (1989)**



**குடந்தை வட்டக் கழகமாக இருந்தபோது முதல் வட்டச் செயலாளராகவும், அடுத்து குடந்தையின் முதல் நகரக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டுகாலம் சிறையிலிருந்தவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

# தமிழ்நாட்டில் ஆளுநரின் தொடர் சட்ட விரோதச் செயல்களுக்கு, தமிழ்நாட்டு மக்கள் உரிய தண்டனையை நிச்சயம் வழங்குவார்கள்!

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்



இராஷ்ட்ரிய சுயம்சேவக் சங் (RSS) அமைப்பின் தலைவர் மோகன்பகாவத் குடியரசு தினத்தன்று மராட்டிய மாநிலம் தானே மாவட்டத்தில், விவாண்டியிலுள்ள கல்லூரி வளாகத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து உரையாற்றும் பொழுது, வேற்றுமை என்பது இந்தியாவில் இயற்கையானதுதான். எனவே, இயல்பாகவும், இயற்கையாகவும் அமைந்துள்ள வேற்றுமைகள் மதிக்கப்பட வேண்டுமென தெரிவித்திருக்கிறார்! இந்திய துணைக் கண்டத்தின் ஒற்றுமை என்பது மறைந்த முன்னாள் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் “வேற்றுமையில் ஒற்றுமை” என்றுதான் குறிப்பிட்டார். இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய பாபா சாகிப் அம்பேத்கார் அவர்களும் “வேற்றுமையில் ஒற்றுமை” என்றக் கருத்தை அடித்தளமாக வைத்துதான் இந்திய அரசியல் சட்டத்தை (Constitution of India) உருவாக்கினார்கள்.

வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாட்டை அடித்தளமாக வைத்துதான் இங்கு வாழும் பல்வேறு தேசிய இனங்களின் தனித்தன்மைகளை பாதுகாக்கின்ற அடிப்படையில் குறிப்பாக, சமூக பொருளாதார அரசியல் அடிப்படையில் சமத்துவத்தை உருவாக்கி, அத்தகைய சமத்துவ சூழ்நிலைகள் எத்தகைய காலசூழ்நிலை மாற்றங்கள் வந்தாலும், கிஞ்சிற்றும் உருக்குலைந்து விடாமல், நிரந்தரமாக பாதுகாத்திடும் வகையில் அரசியல் சட்டத்தை கட்டமைத்தார்கள். இந்தக் கருத்துக்களை உள்ளடக்கிதான் இந்திய நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கு வாக்குறுதிகளாக வழங்கியிருப்பதுதான் அரசியல் சட்டத்தினுடைய முன்னுரை யாகும் (Preamble of the constitution). இந்திய ஒன்றிய நிலப்பரப்பு முழுவதும் பரவி வாழும் மொழி, இனம், மதம், பண்பாடு ஆகியவற்றால் வேறுபட்ட மக்களுக்கு சரிநிகர் சமமான சமூக பொருளாதார அரசியல் நீதி வழங்கப்படும் என்றும், (Justice, social, economic and political), சுதந்திரமாக எண்ணுவதற்கும், எண்ணித் தேர்ந்தக் கருத்துக்களை வெளியிடுவதற்கும், தனிமனித நம்பிக்கைகளுக்கும், அந்த நம்பிக்கைகளின் அடிப்படையி லான வழிபாடுகளுக்கும் தடையற்ற சுதந்திரம் உண்டு எனவும், இங்கு வாழும் அனைத்து குடிமக் களும் சமமாக கருதப்படுவதோடு, சமவாய்ப்பும் வழங்கப்படும் என்றும், அவர்களிடையே சகோதரத்துவத்தையும், அவர்களின் சுயமரியாதையையும் பாதுகாக்கப்படும் என்பதோடு, இங்கு வாழும் குடிமக்களின் ஒற்றுமையையும், நாட்டின் ஒற்றுமையையும் உறுதி செய்யப்படும் என்றும் தீர்க்கமாக பதிவு செய்யப் பட்டுள்ளது.

இந்த வாக்குறுதிகளை உள்ளடக்கிய இந்திய அரசியல் சட்டம் 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதி நாட்டுக்கு பிரகடனப்படுத்தி, 1950 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26 ஆம் நாள் அமல்படுத்தப்பட்டது. இந்திய அரசியல் சட்டம் அமல்படுத்தப்பட்டு 76 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், இந்திய அரசியல் சட்டத்தினுடைய அடிப்படைகளை படிப்படியாக தகர்க்கும் நோக்கில் 2014ஆம் ஆண்டு பாரதிய ஜனதாக் கட்சியினுடைய ஆட்சி தொடங்கிய காலம்தொடங்கி, திட்டமிட்டு சட்டங்களும், திட்டங்களும் உருவாக்கப்படுகிறது. இந்திய அரசியல் சட்டத்தின் முகவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள மதசார்பற்ற சமதர்ம கோட்பாட்டை (Socialist Secular) ஒன்றிய அரசு அங்கீகரிப்பதாக தெரியவில்லை. மாறாக, “இந்துத்துவாக்” கோட்பாட்டின் அடிப்படையிலான “இந்துராஷ்ட்ரத்தை” உருவாக்க இருக்கிறோம் என்று அதிகாரப்பூர்வமாகவே பிரகடனப்படுத்தி, அதற்கான உள்கட்டமைப்புகளை வெளிப்படையாகவும், திரைமறைவிலும், நாடாளுமன்றத்தில் தங்களுக்கான எண்ணிக்கை பலத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். “இந்துத்துவாக்” கோட்பாட்டின் அடிப்படையிலான “இந்துராஷ்டிரத்தை” நிர்மாணிப்பதற்கான தொடக்கமாக “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற முழக்கத்தை முன்வைத்து, இதற்கு ஏதுவான அறிக்கையையும் ஒரு குழுவின் மூலம் பெற்றிருக்கிறார்கள்.

ஒரே காலகட்டத்தில் நாடாளுமன்றங்களுக்கும், சட்டமன்றங்களுக்கும் தேர்தல்கள் என்பது நடைமுறை சாத்தியமற்றது என்று எதிர்க்கட்சியினரும், அரசியல் ஆய்வாளர்களும் தங்களின் ஆணித்தனமான கருத்துகளை முன்வைத்தாலும், இந்தக் கருத்துக்களைப் பற்றி ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சி அரசு கிஞ்சிற்றும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற வழிமுறையைப் பின்பற்றி நாடாளுமன்ற ஜனநாயக முறையிலிருந்து, ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மாறுவதற்கான அறிகுறிகள்தான் பிரகாசமாகத் தெரிகிறது. ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மாறிவிட்டால், “இந்துத்துவாக்” கோட்பாட்டின் அடிப்படையில் “இந்துராஷ்டிரத்தை” எளிதில் உருவாக்கிடலாம் என்பது ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சி அரசின் திட்டமாகும். இந்துத்துவாக் கோட்பாடு என்பது வேதகால மனுதர்மக் கோட்பாடுகளோடு இன்றைய கால மாற்றத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, தடைகளைச் சமரசம் செய்யும் நோக்கில் கார்ப்பரேட்டுகளுடன் பயணப்படவிருக்கும் கோட்பாடுதான் இன்றைய இந்துத்துவமாகும். ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் இன்றைய ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி, இராஷ்ட்ரிய சுயம் சேவக் சங் (RSS) அமைப்பின் ஆலோசனைப்படி, இந்தியாவை இந்துராஷ்ட்ரமாக மாற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ஆட்சியில் உள்ள பாரதிய ஜனதாக் கட்சியும், அந்தக் கட்சியின் “ராஜகுருவான” ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் மேற்கொண்டிருக்கும் இந்த திட்டத்திற்கு தடையாக இருப்பது இந்திய அரசியல் சட்டம் (Constitution of India). இந்திய அரசியல் சட்டத்தையும் காலப்போக்கில் நீர்த்துப்போகக்கூடிய திரைமறைவு நடவடிக்கைகளையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டுச் செய்துவருகிறது. இந்த நடவடிக்கை மட்டுமல்ல, எதிர்க் கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் அந்தந்த மாநில ஆளுநர்கள் மூலமாக எதிர்க்கட்சிகளின் அரசுகளுக்கு எல்லையற்ற தடைகளையும், சங்கடங்களையும் தொடர்ந்து செய்துகொண்டு இருக் கிறார்கள். இதற்கு இடையில் ஆளுநர்கள் மாநில அரசுகளின் அதிகாரங்களை ஆக்கிரமிப்பு செய்கின்ற முயற்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்திய அரசியல் சட்டத்தில் மாநிலங்களின் ஆளுநருக்கான அதிகாரங்கள் 152வது பிரிவிலிருந்து, 164வது பிரிவு வரை வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த பிரிவுகளின் சரத்துக்கள்படி ஆளுநர்களின் பணி அமையாமல், தன்னிச்சையாக மாநில அரசுகளின் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களில் தலையிட்டு குழப்பங்களைத் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ்நாட்டினுடைய ஆளுநர் இந்திய அரசியல் சட்டப்படியான அதிகாரங்களைப் பற்றி கவலைப்படாமல், ஆளுநர் மாளிகையில் இருந்து கொண்டு, தன் விருப்பப்படி ஒரு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார். சமீபத்தில் குடியரசு தினத்தன்று, அதனைத் தொடர்ந்து சகஜாநந்தாவின் 135ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் பொழுது அவர் பேசிய பேச்சுகள் 26.01.2025 ஆம் நாள் தினமலர் நாளிதழில் பக்கம் 12ல், இந்து தமிழ் திசை நாளிதழில் பக்கம் 9ல் பிரசுரமாகி யிருக்கிறது.

அவர் பேசியதாக வெளியிட்டுள்ள இந்தக் கருத்துக்கள் மதசார்பற்ற இந்திய அரசியல் சட்டப்படி ஆட்சி நடைபெறும் நாட்டிற்கு எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. அது மட்டுமல்ல, சாதி, இன வேற்றுமைகளை உருவாக்கும் கருத்துகளை இந்த நிகழ்ச்சிகளில் பகிரங்கமாக வெளிப்படுத்துகிறார். ஒரு மாநிலத்தில் ஆளுநராகப் பொறுப்பேற்கும் பொழுது இந்திய அரசியல் சட்டம் 159வது பிரிவின்படி உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த உறுதிமொழியை எடுத்துக்கொண்டு ஆளுநராகப் பொறுப்பேற்ற ஆளுநர் ரவியினுடைய இந்தக் கருத்துகள் முற்றிலும் முரண்பட்டதாகவே இருக்கிறது. ஆளுநர் ரவியினுடைய நோக்கமும், செயலும் தமிழ்நாடு அரசினுடைய செயல் திட்டங்களையும், மக்களுக்கான பணிகளையும் சீர்குலைப்பதாகவே உள்ளது என்பதை அவருடைய சிதம்பரம் உரை நிரூபித்துக் காட்டுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினுடைய தலைவர் மோகன்பகாவத் இந்தியாவில் வேற்றுமைகள் இருப்பது இயல்பானதும், இயற்கையானதும் தான் என்ற கருத்து ஆளுநருடைய செயல்பாட்டிற்கு முற்றிலும் மாறுபட்டதாகவே இருக்கிறது.

தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட முரண்பட்ட சூழ்நிலைகளை மக்களுக்கு புரிய வைக்கும் ஒரு முதுமொழி வழக்கத்தில் உள்ளது. அந்த முதுமொழிதான் “படிக்கிறது இராமாயணம், இடிக்கிறது பெருமாள் கோயில்” என்பதாகும். ஆர்.எஸ்.எஸ். தலைவர் நாட்டு மக்களுக்கு இராமாயணத்தைப் படித்து காட்டுகிறார், ஆளுநர் ரவி பெருமாள் கோவிலை தமிழ்நாட்டில் இடித்துக் காட்டுகிறார் என்றுதான் கருத முடிகிறது. எனவே, இந்த முதுமொழிக்கு ஏற்ப “சொல்வது ஒன்றாகவும், செய்வது வேறொன்றாகவும் இருப்பதுதான்” ஒன்றிய பா.ஜ.க.வின் ஆட்சி என்பதை மோகன் பகாவத் பேச்சும், ஆளுநர் ரவினுடைய செயல்பாடும் உரிய எடுத்துக்காட்டுகளாக அமைகிறது.

எனவே, எதிர்காலத்தில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதற்கான எச்சரிக்கைதான் இவர்களுடைய பேச்சும், செயலுமாகும்!



தேனி வடக்கு மாவட்டம் தென்கரை பேரூராட்சி காலேஜ் விளக்குகில் 49 லட்சம் மதிப்பில் தார்ச் சாலை அமைக்கும் பணியை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. துவக்கி வைத்தார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., தென்கரை பேரூராட்சி தலைவர் வே.நாகராஜ், தாமரை குளம் பேரூராட்சி தலைவர் பால்பாண்டி, பேரூர் செயலாளர்கள் பாலமுருகன், கார்த்தராசு, நகரச் செயலாளர் முகமது இலியாஸ், உத்தமபாளையம் முன்னாள் ஒன்றியச் செயலாளர் முல்லே சேகர், தென்கரை பேரூராட்சி கவுன்சிலர்கள் செயல் அலுவலர் குணாளன் மற்றும் கழக முன்னோடிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.